# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.48/2022** **நாள் : 15.09.2022**

**வளசரவாக்கம், இராமகிருஷ்ணா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் 400 மி.மீ விட்டமுள்ள உந்துகுழாயுடன் ஆற்காடு சாலை மற்றும் காமராஜர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள 1200 மி.மீ விட்டமுள்ள பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 17.09.2022 காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை பகுதி–10, பகுதி–11 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

வளசரவாக்கம், இராமகிருஷ்ணா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் 400 மி.மீ விட்டமுள்ள உந்துகுழாயுடன் ஆற்காடு சாலை மற்றும் காமராஜர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள 1200 மி.மீ விட்டமுள்ள பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் 17.09.2022 காலை 5 மணி முதல் மாலை 5 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால் பகுதி–10–க்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர், கே.கே.நகர், நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை பகுதியில் ஜோன்ஸ் ரோடு வரை மற்றும் பகுதி-11-க்குட்பட்ட ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயல், தாய்சா குடியிருப்பு, கே.கே.நகர் மற்றும் சூளைமேடு குடிநீர் பகிர்மான நிலையத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு குழாயின் மூலமாக வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மேலும், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள மற்றும் கீழ்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர் - 10<br>கைபேசி எண்.8144930910<br>(கோடம்பாக்கம் ) | எம்.ஜி.ஆர் நகர், கே.கே.நகர், நெசப்பாக்கம், ஜாபர்கான்பேட்டை, சைதாப்பேட்டை பகுதியில் ஜோன்ஸ் ரோடு வரை, |
| பகுதிப் பொறியாளர் - 11<br>கைபேசி எண்.8144930911<br>(வளசரவாக்கம்) | ராமாபுரம், வளசரவாக்கம், மதுரவாயல், தாய்சா குடியிருப்பு. |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்